**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, வைத்தியசாலைச் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளதுடன் ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக | நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இத்தவறு திருத்தப்பட்டு 2021 ஆம் வருட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 197,080,968 ஆன சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு வழு இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட்டு தேறிய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுகாதார அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக மற்றும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக இந் நடவடிக்கைகளில் அதிகாரிகளை ஈடுபடுத்துவதும் கடினம். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் அட்டுறு மதியுரைக் கட்டணம் ரூபா 30,981,636 மற்றும் அட்டுறு நானாவிதச் செலவுகள் ரூபா 3,535,910 என்பன கணக்கிற்கு எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 34,517,546 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சபைத் தலைவியின் அங்கீகாரம் பெறப்படாமையால் கணக்கில் எடுக்கப்படவில்லை. | இத் தவறு திருத்தப்பட்டு 2021 ஆம் வருட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நன்கொடையாகக் கிடைத்திருந்த மொத்தக் கிரயம் ரூபா 14,308,094 ஆன நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் காலக் கழிவுப் பெறுமதி ரூபா 2,021,221 ஆனது நன்கொடைகள் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மூலதன மானியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் வருடத்தில் திருத்தப்படும். | இத் தவறு திருத்தப்பட்டு 2021 ஆம் வருட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

1.6 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞபாகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு | வைத்திய சாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் பட்டோலையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சீதுவையில் அமைந்துள்ள காணியின் உரிமை 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் வைத்தியசாலைச் சபைக்குப் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உறுதி இலக்கம் 798 மூலம் காணியின் உரிமை வைத்தியசாலை பணிப்பாளர் சபைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் காணியின் உரிமை வைத்தியசாலைச் சபைக்குக் கையளிக்கப்படல் விரைவில் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(2) ஆம் பிரிவு | இரு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 326,825 ஆன தேக்கங்கள் மற்றும் ரூபா 90,874 ஆன மீண்டும் செலுத்தப்பட வேண்டிய டென்டர் வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இரு வருடங்களுக்கு மேற்பட்ட தேக்கி வைக்கப்பட்ட பணம் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியும் கோரிக்கைகள் எதுவும் விடுவிக்கப்படவில்லை மற்றும் 2021 ஆம் வருடத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளுக்காக ஆட்சேரத்தல் மற்றும் பதவி உயர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், இவ்வறிக்கைத் திகதி வரையில் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 73,649,566 ஆன பற்றாக்குறை என்பதுடன், முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 64,968,925 ஆகும். அதன் பிரகாரம் அதற்கொத்த நிதி விளைவுகளில் ரூபா 8,680,641 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப் பின்னடைவிற்கு, ஏனைய வருமானம் ரூபா 1,374,616 ஆல் குறைவடைந்தமை மற்றும் வருடத்திற்கான செலவுகள் ரூபா 40,209,741 ஆல் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாட்டு அறைகளை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் வருடத்தில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 256 மில்லியன் | இக் கட்டிட நிர்மாணம் தொடர்பாக சுகாதார அமைச்சின் பெறுகைக் குழு சகல | ஒதுக்கங்கள் செயற்திறனாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படாது 2020 திசெம்பர் 31 திகதி வரையில் ரூபா 30,981,636 மதியுரைக் கட்டணமாகக் கொடுக்கப்படுவதற்காக கடப்பாடுகளுக்கு உடன்பட்டிருந்தது. எனினும், இவ்வறிக்கைத் திகதி வரையில் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய இத் தொகை விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகளையும் நிறைவு செய்து அமைச்சரவை பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பித்த பின்னர் அப்போதைய புதிய அரசினால் 2 வருடகாலத்திற்கு அனைத்து நிர்மாணங்களையும் இடை நிறுத்தியமை மற்றும் இச் செயற்திட்டம் செயற்படுத்த முடியுமென்பதால் இது விளைவற்ற செலவொன்றாக கருதப்பட முடியாததெனவும் மற்றும் அரசினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானமொன்று என்பதால் இது அவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வ அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை விஞ்சியதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2017 திசெம்பர் 15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கான பதவிகளுக்காக அதிகாரி ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அத்துடன் 05 அங்கீகரிக்கப்பட்ட நிலையான பதவிகளுக்காக நிலையான அடிப்படையில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் இன்றி ஒப்பந்த அடிப்படையில் 08 | வைத்தியசாலையில் காணப்பட்ட வைத்தியர்கள் பற்றாக்குறையால் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டதாகவும், புதிய பதவியொன்றை ஏற்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட முடியாதென சம்பள ஆனைக்குழுவால் குறிப்பிடப்பட்டதாகவும், வெற்றிடங்களுக்காக இந்தப் பதிவு செய்யப்பட்ட வைத்தியரின் சேவையினை ஈடுபடுத்தியதாகவும் மற்றும் இதனால் நட்டமேதும் ஏற்படவில்லை எனவும் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்து மருத்துவ அதிகாரிகள் மற்றும் செவிலியர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதும் | வைத்தியசாலை ஊழியருக்காக புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். அத்துடன் நிலையான அடிப்டையில் அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | ஆனால் பொருத்தமான அதிகாரிகள் கோரப்படாததால் ஒப்பந்த அடிப்படையில் பொருத்தமான அதிகாரிகள் ஆட்சேர்க்கப்பட்டதாகவும் மற்றும் நோயாளிகளைத் தொடர்ந்து கவனிப்பதற்கு இந் நடவடிக்கைள் எடுக்கபட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி, வைத்தியசாலைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அல்லாத பணிப்பாளர் சபைச் செயலாளர் பெயரில் புதிய பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு, அப்பதவிக்காக 2019 செப்டெம்பர் மாதத்திலிருந்து அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருந்தமையுடன் அன்றிலிருந்து 2020 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 560,000 செலுத்தப்பட்டிருந்தது. | 2018.10.03 இல் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முடிவின் படி பணிப்பாளர் சபைச் செயலாளரின் பணிகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் குறித்த ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தற்காலிக அடிப்படையில் படியொன்று செலுத்தப்பட்டு இந்த அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தனர். | வைத்தியசாலை ஊழியர்களுக்காக புதிய பதவிகளை ஏற்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் |